**MCOP NO: 238/2025** **DATE: 23.02.2026**

ம.சா : 2

பெயர் : திரு.ரவிகுமார்

த/பெ : திரு. மூர்த்தி

வயது : 35

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கண்ணுற்ற சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 12 ஐ தாக்கல் செய்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வரவில்லை. மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து குறித்த சாட்சி பட்டியலில் என் பெயர் இல்லை. விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. இந்த விபத்து சாலையில் நடுவில் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் சாலையின் ஓரமாக தான் சென்றார், பேருந்து தான் இடித்தது. இறந்த நபரின் வயது மூப்பின் காரணமாக தான் நடுரோட்டில் கவனகுறைவா சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இறந்த நபரை எனக்கு தெரியாது. இறந்த நபரை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரருக்கு உதவும் நோக்கில் இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு உதவ வேண்டி பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு 23.02.2026 ல் அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.